*(வலைப்பின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர்கள் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(1999, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக்குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II **ஆம் பகுதிக்கு** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை: ரூபா 7.75** **தபாற் செலவு: ரூபா 3.50**

### 1999 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர்கள் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

[1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது.]

ச.வ. - ஓ. 2/94

**புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர்கள் சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

"புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம்" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான ஒரு நிதியம் அதன் உறுப்பி னர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிதியத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக் கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட நிதியம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங் களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள் களையும் கருமங்களையும் அது இதுவரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் நிதியத்தின் பணிப்பாளர் சபை அது கூட்டிணைக்கப்பட விண் ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

கருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர்கள் சபை (கூட்டிணைத்தல் ) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத் தின் பணிப்பாளர் சபையைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்ன ரும் புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்தின் உறுப்பினர் களாக அப்போதைக்குள்ள அத்தகையதும் அவ்வெண்ணிக்கை யினதுமான உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபை யானது "புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப் பாளர்கள் சபை" என்னும் பெயரின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் வேண்டும்; (இது இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்); அத்துடன் அது எல்லா நீதிமன்றங் களிலும் அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்த வும் அது விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கை மக்களினது, கல்வி, சமய, கலாசார, சமுதாய, பொருளாதார சேமநலன்களைச் சீராக்கலும், மேம்படுத்தலும் ;

(ஆ) இலங்கை மக்கள் மத்தியில் நிலவும் சமுதாய மற்றும் வேறு ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(இ) இலங்கையின் பின்தங்கியோரதும் சமூகநல வசதி குறைந்தவர்களினதும், குறிப்பாக இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் “நாவிதர்” சமுதாயத்தைச்சேர்ந்த பொதுவில் சமூக அபிவிருத்தியில் போதியளவு முன்னேற்றம் காணாத ஆட்களினதும் நலன்களை முன்னேற்றுதல் ;

(ஈ) இலங்கை மக்களிடையே ஒற்றுமையெழுச்சியை வளர்த்தலும் நல்லெண்ணத்தையும் நட்பையும் மேம்படுத்துதலும் ;

(உ) தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் கலாசாரத்தை வளர்த்தலும் மேம்படுத்தலும் ;

(ஊ) ஆரம்பக்கல்வி, இரண்டாந்தரக்கல்வி, உயர் கல்வி என்பவற்றிற்கு நிதியுதவியளித்தலும், புலமைப் பரிசில்கள் வழங்குதலும் ;

(எ) கல்விக்கான புலமைப் பிரிசில் நிதிகளைப் பேணுதலும் நிருவகித்தலும் ;

(ஏ) போட்டிகள், விவாதங்கள், விரிவுரைகள், கலந்துரையாடல்கள், விளம்பரங்கள் மற்றும் செய்முறைக் கற்கைகள் போன்றவற்றை மேம்படுத்துதலும் ஊக்குவித்தலும் அத்துடன் ஒழுங்கமைப்பதில் உதவிசெய்தலும் அத்துடன் சஞ்சிகை, விவரத் தொகுப்பு, கல்விப் பிரசுரங்கள், வேறு இலக்கிய வெளியீடுகள் போன்றவற்றை அச்சிடுதலும் வெளியிடுதலும் ;

(ஐ) நூல்நிலையங்களையும், வாசிகசாலைகளையும், கற்கை சுற்றுக்களையும் ஏற்படுத்திக் கொண்டு நடாத்துதலும் ;

(ஒ) கல்வி, முகாமை, வர்த்தகம், கைத்தொழில், கமத் தொழில் அத்துடன் ஏனைய சேமநல நடவடிக்கை களை மேம்படுத்துவதற்கான ஆலோசனைச் சேவைகள், பயிற்சிச் சேவைகள் போன்றவைகளுக்கு ஏற்பாடு செய்தல் ;

(ஓ) கைம்பெண்கள், அநாதைகள், ஆதரவற்றோர் இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் வலது குறைந்தோருக்கு நிதி சார்பான அல்லது வேறு வகையான உதவிகளை வழங்கல் ;

(ஔ) அநாதைப்பிள்ளைகளுக்கும் வயோதிபர்களுக்கும் ஆதரவற்றோருக்கும், இல்லங்களை நிறுவிஅவற்றை நிர்வகித்துப் பராமரித்தல் ;

(க) கடன்களை வழங்குவதன் மூலமோ அல்லது கடனின்றியோ வர்த்தகம், கமத்தொழில் அல்லது கைத்தொழில் போன்றவை தொடர்பான திட்டங் களில் ஈடுபடும் ஆட்களுக்கு ஊக்கமளித்தலுடன் அவற்றை மேம்படுத்தலும் அத்துடன் ஒழுங்கமைத் தலும் ;

(ங) மரண உதவிநிதி, வீட்டுக் கடன்திட்டங்களை தாபித்தும், பராமரித்து நிர்வகித்தல் ;

(ச) அரச அல்லது அரச சார்பற்ற முகவர் நிலையங்கள் மேற்கொள்ளும் நிவாரண வேலைகள், புனரமைப்பு, மீள் நிருமாணம், வீடமைப்பு மற்றும் சேமநல நடவடிக்கைகளுக்கு உதவுதல் அத்துடன் ;

(ஞ) கூட்டுத்தாபனத்தின் மேலே சொல்லப்பட்ட குறிக் கோள்களை எய்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையானதும் உகந்ததுமாகக்கூடியவாறான மற்றும் எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல் ;

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

*4*. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் மேலெடுத்துச் செல்வதற்கும் அவசியமாகின்றவாறான அல்லது விரும்பத்தகு எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும், அத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணம் கடன் எடுக்கவும் அல்லது திரட்டவும், அளிப்புக்களையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், ஒப்பந்தங்களைப் செய்யவும், அதன் நிதிகளை முதலீடு செய்யவும், தனிப்பட்ட உத்தரவாதம் அல்லது வேறுவகையில் கடன்கள் வழங்கவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையில் ஈடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**5**, (*1*) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்குமாகவும் இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதவையாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் நியமனங்கள் அத்துடன் அவர்களின் அத்காரங்கள், நடத்தைகள் மற்றும் கடமைகள் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்கள், தத்துவங்கள், நடத்தை மற்றும் பணிகள் ;

(இ) உதவி பெறுவோரைத் தெரிவுசெய்வதற்கான மூலப் பிரமாணங்களும் உதவி பெறும் பிரிவினரிடையே பல்வேறு மூலவளங்களை ஒதுக்கீடு செய்தலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நிதியைத் திரட்டுதல், அவற்றை முதலீடு செய்தல், செலவு செய்தல் அத்துடன் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களைக் கூட்டுதல், நடாத்துதலில் பின்பற்றப்படவேண்டிய நட வடிக்கைமுறை, கூட்டங்களின் நேரம், இடம் அத்த கைய கூட்டங்களின் அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், கூட்டநடப்பெண் கூட்டத்தில் விடயங்களைக் கொண்டுநாடத்துதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தல் முகாமைசெய்தல், அதன் நிதியத்தைக் கட்டுக் காப்பில் வைத்திருத்தல் அத்துடன் அதன் கணக்கு களைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ;

(எ) சமூக முன்னேற்றச் சங்கங்கள் சம்மேளனத்தையும் அதன் இணைந்த சங்ககங்ளையும் கூட்டுத்தாப னத்துடன் இணைத்துக் கொள்வதற்கான நியதி நிபந்தனைகள் ; அத்துடன்

(ஏ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும், அதன் குறிக்கோள்களை எய்தலும்.

(2) இப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதிகள் அல்லது இதன் பின்னர் நிறைவேற்றப் படக்கூடிய ஏதேனுவி விதிகள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப் பட்ட ஒரே விதியைப் போன்றே அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப் படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய திகதியன்று வலுவிலுள்ள புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்தின் விதிகள், அவை இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத வரையில் இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாப னத்தின் விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத் தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**6**. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது ஏதேனும் இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிள்ள விதிகளுக்கு அமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்ப் பதற்கான முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

*நிதியத்திடமிருந்து செல்மதியாக உள்ளனவும் அதற்குச் செலுத் தப்படவுள்ளனவு மான தனிசுகள்*

**7**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதான புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத் திற்குரிய எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தித் தீர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்திகதியில் புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசு களும் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்கள் அத்துடன் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத் தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*சமூக முன்னேற்றச் சங்கங்களின் சம்மேள னமும் அதன் அங்கத் துவக் கழகங்களும் கூட்டுத்தாபனத்தின் ஒன்றிணைந்த கூட்டுத்தாபனக் குழுக்களாதல்.*

**8**. சமூக முன்னேற்றச் சங்க சம்மேளனமும் அதன் அங்கத் துவ சங்கங்களும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கமைய கூட்டுத்தாபனத்துடன் ஒன்றிணைந்த நிறுவனங்களாகலாம்.

*கலைப்பின்போது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**9**. (1) அந்நோக்கத்துக்கெனக் கூட்டப்பட்ட உறுப்பினர்களின் ஒரு விசேட பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் அத்தனை உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கு பெரும் பான்மையினர் எடுக்கும் முடிவின் மேலன்றிக் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுதலாகாது.

(2) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதன் எல்லாத் தனிசுகளையும் பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மையானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப் பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களி டையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது, ஆனால் அவை சமூக

முன்னேற்றச் சங்க சம்மேளனத்துக்கும் அல்லது அதன் ஒன்றிணைந்த அங்கத்துவ சங்கங்களுக்கு அதன் குறிக்கோள்களை மேம்படுத்த அல்லது அவற்றை அடையப்பெறுவதற்காக கொடுக்கப்படல் அல்லது கைமாற்றப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைப் பணிப்பாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம். கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடனும் அதன் அதிகாரம்பெற்ற இரு பணிப்பாளர்கள் முன்னிலையிலுமன்றி இலச்சினையானது எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது, அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக, அச்சாதனத்தில் தங்கள் பெயர்களை கையொப்பமிடல் வேண்டும், அவ்விதம் கையொப்பமிடுவதானது, எவரேனும் ஒருவர் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கணக்காய்வும் கணக்குகளும்.*

11. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

12. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல், கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினது உரிமைளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

13. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.